ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2274/29 – 2022 අප්‍රේල් 08 වැනි සිකුරාදා – 2022.04.08
*2274/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நீதிச்சேவை ஆணைக்குழு**

**அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களின் பிரமாணக் குறிப்பு - மீளமைப்பு இலக்கம் 01**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களின் பிரமாணக் குறிப்பினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளமைப்பதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

1. 10.9.1.1 (ஈ) பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிலீடு செய்ய வேண்டும்.

   10.9.1.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

   (ஈ) கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் **இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில்** சித்தி பெற்று அதில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட மூன்று (03) பாடங்களுக்கு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

2. 10.9.2.1 (ஈ) பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிலீடு செய்ய வேண்டும்.

   10.9.2.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

   (ஈ) கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி /ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் **இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில்** சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3. 10.9.3.1 (ஈ) பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதீலீடு செய்ய வேண்டும்.

10.9.3.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.

(ஈ) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் **இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில்** சித்திகள் பெற்று அதில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழி உட்பட மூன்று (03) பாடங்களுக்கு திறமை சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்களத்திலும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியிலும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

4. 10.9.4.1 (ஈ) பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதீலீடு செய்ய வேண்டும்.

10.9.4.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

(ஈ) கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்கள தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் **இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில்** சித்தி பெற்று அதில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி உட்பட மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்களத்திலும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியிலும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியிலும் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

5. 11.9.2.1 (அ) பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதீலீடு செய்ய வேண்டும்.

11.9.2.1 கல்வி தகைமைகள் மற்றும் அனுபவம்

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள /தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் **இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில்** சித்தி பெற்று அதில் சிங்கள /தமிழ் மொழி உட்பட மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**எச்.எஸ். சோமரத்ன,**
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2022, ஏப்பிறல் 07.

E0G04-0043

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.